**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திட்டக்குடி</u>**

முன்னிலை : திரு.மு. ஆசிப் முகமது, பி.ஏ., எல்.எல்.பி., (Hons)
குற்றவியல் நீத்துறை நடுவர், திட்டக்குடி

2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் புதன்கிழமை

**<u>C.M.P.NO.3561/2025</u>**
**<u>in</u>**
**<u>Cr.No. 238/2025 இராமநத்தம் காவல் நிலையம்</u>**

கணேசன்,
த.பெ. செல்லமுத்து ...... மனுதாரர்/எதிரி/ உரிமையாளர்

**– எதிர்–**

அரசுக்காக, காவல் நிலைய அதிகாரி,
இராமநத்தம் காவல் நிலையம்,
குற்ற எண். 238/2025
பிரிவுகள் 4(1)(A) TNP Amendment Act and 14 MV Act .....எதிரி

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது பா.ந.சு.ச. பிரிவு 497 மற்றும் 503 –ன் கீழ் மனுதாரருக்கு சொந்தமான TN 31 BT 2687 என்ற பதிவெண்கொண்ட TVS XL Super Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்க ராமநத்தம் காவல் நிலையத்தாருக்கு உத்தரவிட்டும் மேலும் இடைக்கால பராமரிப்பில் வழங்கிட உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனு, உறுதிமொழி ஆவணம் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.

**2.** மனுதாரர் தனது மனுவில், TN 31 BT 2687 என்ற பதிவெண்கொண்ட TVS XL Super Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தினை ராமநத்தம் காவல் நிலையத்தார் குற்ற எண். 238/2025 பிரிவுகள் பிரிவுகள் 4(1)(A) TNP Amendment Act and 14 MV Act –ன் கீழான வழக்கில் கைப்பற்றியுள்ளார்கள் என்றும், மேற்படி வாகனத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மேற்படி வாகனம் இராமநத்தம் காவல் நிலையத்தில் திறந்த வெளியில் நிற்பதால் மழையிலும்,வெயிலிலும் ஓடாமல் ஒரே இடத்தில் நிற்பதால் துருபிடித்து வீணாகிவிடும் என்றும், மேலும் வாகனம் தனது சொந்த உபயோகத்திற்கு தேவைப்படுவதாகவும் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், நீதிமன்றம் கோரும்போது வழக்குச் சொத்தை அதே நிலையில் ஒப்படைப்பதாகவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட வேண்டுமென கோரினார்.

**3.** எதிர்மனுதாரர் காவல் துறையினர் தங்களது பதில் மனுவில் TN 31 BT 2687 என்ற பதிவெண்கொண்ட TVS XL Super Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தினை அரசுக்கு ஆதாயம் செய்யவேண்டி மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு பிரிவு கடலூருக்கு அனுப்பப்பட்டுள்ளது வழக்கு சொத்தை பெற்று விரையில் ஒப்படைக்கிறேன் என்று பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. மனுவானது வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடவும், இடைக்கால பராமரிப்பில் கோரியும் பா.ந.சு.ச.பிரிவு 497 மற்றும் 503 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் மனுதாரர் வழக்கறிஞரால் பா.நா.சு.ச.பிரிவு 497 –ஐப் பொறுத்து வலியுறுத்தவில்லை என மேற்குறிப்பு செய்துள்ளார். ராமநத்தம் காவல் நிலைய குற்ற எண். 238/2025 பிரிவுகள் பிரிவுகள் 4(1)(A) TNP Amendment Act and 14 MV Act –ன் கீழான வழக்கில் மனுதாரரின்

TN 31 BT 2687 என்ற பதிவெண்கொண்ட TVS XL Super Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தினை புலன் விசாரணை அலுவலரால் **09.10.2025** ஆம் தேதி கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளதாக காணப்படுகிறது.

**5.** எனவே வழக்கு சம்பவத்தில் புலன் விசாரணை அலுவலரால் கைப்பற்றப்பட்டுள்ள மனுதாரரின் TN 31 BT 2687 என்ற பதிவெண்கொண்ட TVS XL Super Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தினை **15.05.2026** ஆம் தேதிக்குள் ஆஜர் படுத்தி வழக்கு சொத்து எண் பெற வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, **2026**–ம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் **29**–ஆம் நாள் அவையறியப்பகரப்பட்டது.

ஒப்பம் ( மு. ஆசிப் முகமது)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திட்டக்குடி.